**மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், B.Sc., B.L.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை

**அமர்வு வழக்கு எண்.200/2022**

(CNR No: TNTP01-007579-2022)

(இவ்வழக்கு, ஸ்ரீரங்கம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.25/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் மேல்விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது.)

தமிழ்நாடு அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
ஸ்ரீரங்கம் காவல் நிலையம்,
குற்ற எண்.552/2020. ... குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.ரஞ்சித் (எ)குண்டடன் ரஞ்சித், 33/2026
த/பெ அங்கமுத்து,
எண்.35 கரிகாலன் தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

2.பிரபாகரன்(எ) பிரபு,36/2026,
த/பெ வேணுகோபால்,
எண்.18 கரிகாலன் தெரு,

நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

3.ஆகாஷ் (எ) அஜய், 26/2026
த/பெ செல்வமணி,
எண்.76 கரிகாலன் தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

4. ரஞ்சித், 33/2026,
த/பெ கடல்கேசன்,
எண்.24 தாகூர் தெரு,
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

5.விஜய், 42/26,
த/பெ அரிச்சந்திரன்,
எண்.23 கரிகாலன் தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

6. விவேக், 32/2026,
த/பெ சங்கர்,
எண்.82/15, தாகூர் தெரு,
திருவானைக்கோவில்,
ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி.

7. முருகானந்தம், 31/2026,
த/பெ துரைராஜ்,
எண்.67, கரிகாலன் தெரு,
நடுகொண்டயம்பேட்டை,
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

8. தேவா, 47/2026,
த/பெ ரெத்தினசெல்வம்,

கரிகாலன் தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

9.ஹரிஹரன்(எ) ஹரி, 25/2026,
த/பெ தேவன்,
எண்.161, கரிகாலன் தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

10. சரவணகுமார்(எ) சரவணன்,
வயது, 31/2026,
த/பெ சீனிவாசன்,
எண்.23/23 கரிகாலன்தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

11. திருமூர்த்தி, 29/26,
த/பெ ராஜரெத்தினம்,
எண்77, கரிகாலன்தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

12. ராஜ்குமார், 34/2026,
த/பெ கர்ணன்,
கரிகாலன்தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

13. நந்தகுமார், 26/2026,
த/பெ பாலகிருஷ்ணன்,
எண்.154, கரிகாலன்தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

14. சுரேஷ்குமார்(எ) சுரேஷ், 28/2026,
த/பெ மனோகர்,
எண்.4/3 கரிகாலன்தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

15.சுதாகர்(பிரபு), 41/2026,
த/பெ பெரியசாமி,
எண்.184, கரிகாலன்தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

16. விஜயகாந்த், 25/2026,
த/பெ மனோகரன்,
எண்.4/39, கரிகாலன்தெரு,
நடுகொண்டையம்பேட்டை
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி. ... எதிரிகள்

| | | |
|---|---|---|
| முதல் நிலை பதிவேட்டு வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 03.10.2022 |
| எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவுகள் | : | 1 முதல் 16 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 148, 294(பி), 324, 307 r/w 3 of TNPPDL ACT 1992 –ன் படி. |
| மேற்படி எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | **முதலாவது குற்றச்சாட்டு (1 முதல் 16 எதிரிகள் மீது):** திருச்சி மாநகரம்,ஸ்ரீரங்கம் சட்டம் ஒழுங்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மேலகொண்டையம்பேட்டை தெற்கு தெரு ஐயன்வெட்டி தெரு சந்திப்பு பாதள சாக்கடை |

| | | |
|---|---|---|
| | | கிணறு அருகே கடந்த 09.08.2020ந் தேதி இரவு 22.00 மணிக்கு இவ்வழக்கின் சாட்சி 1 விஜயராஜ் மற்றும் சாட்சி 2 மகேஷ்குமார் ஆகியோர்கள் சாட்சி 1 விஜயராஜ் அவரது தகப்பனாருக்கு சொந்தமான TN 48 AB 5416 Splendor Pro மோட்டார் சைக்கிளில் அவரது அப்பாவிற்கு மாத்திரை வாங்க செல்வதற்காக சம்பவ இடத்திற்கு வந்தபோது, மேலகொண்டையம்பேட்டை மற்றும் நடுகொண்டையம்பேட்டையயைச் சேர்ந்த 1 முதல் 16 எதிரிகள் அனைவரும் மற்றும் இளம்பிழையாளி சிவனேசன் ஆகியோர்கள் கலகம் செய்யும் பொதுவான நோக்கத்துடன் சட்டவிரோதமாக கையில் கற்கள் மற்றும் கட்டான்களுடன ஒன்று கூடியதன் மூலம் 1 முதல் 16 எதிரிகள் இதச பிரிவு 148ன் கீழ் தண்டிக்கத்தக்கதும், இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றம் ஒன்றை செய்துள்ளீர்கள். |

| | | |
|---|---|---|
| | | **<u>இரண்டாவது குற்றச்சாட்டு (1 முதல் 16 எதிரிகள் மீது):</u>**<br><br>மேற்படி நாள், மேற்படி நேரம், மேற்படி சம்பவ இடத்தில் வைத்து மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1 முதல் 16 எதிரிகளும் மற்றும் இளம்பிழையாளி சிவனேசனும் சவுக்கு கட்டான், கல் மற்றும் கையால் மாறி மாறி தாக்கி சாட்சி 1 விஜயராஜ், சாட்சி 2 மகேஸ்குமார் ஆகியோர்களுக்கு சிறிய காயத்தை ஏற்படுத்தியதன்மூலம் 1 முதல் 16 எதிரிகள் இதச பிரிவு 324 ன் கீழ் தண்டிக்கத்தக்கதும், இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றமொன்றை செய்துள்ளீர்கள்.<br><br>**<u>மூன்றாவது குற்றச்சாட்டு (1 முதல் 16 எதிரிகள் மீது):</u>**<br>மேற்படி நாள், மேற்படி நேரம், மேற்படி சம்பவ இடத்தில் வைத்து 1வது எதிரி தன் கையில் வைத்திருந்த சவுக்கு கட்டானால் சாட்சி 1 விஜயராஜை தாக்கி வலது |

| | | |
|---|---|---|
| | | முன்கையில் காயமாக்கியும், சாட்சி 2 மகேஷ்குமாரை 2வது எதிரி தன் கையில் வைத்திருந்த கட்டானால் சாவுடா என்று சொல்லி தாக்கி, வலது கை நடுவிரலில் காயமாக்கியும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, மற்ற எல்லா எதிரிகளும் மற்றும் இளம்பிழையாளி சிவனேசனும் சவுக்கு கட்டான், கல் மற்றும் கையால் மாறி மாறி தாக்கி சாட்சி 1 விஜயராஜ் மற்றும் சாட்சி 2 மகேஷ்குமார் ஆகியோர்களை பார்த்து நீங்க இனி உயிரோடு இருக்கக்கூடாது இத்தோடு செத்து தொலைந்து போங்கடா என்று கொலை முயற்சி செய்ததன் மூலம் 1 முதல் 16 எதிரிகள் இதச பிரிவு 307ன் கீழ் தண்டிக்கத்தக்கதும் இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றம் ஒன்றை செய்துள்ளீர்கள். |

| | | |
|---|---|---|
| | | **<u>நான்காவது குற்றச்சாட்டு (1 முதல் 16 எதிரிகள் மீது):</u>**<br><br>மேற்படி நாள், மேற்படி நேரம், மேற்படி சம்பவ இடத்தில் வைத்து மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரிகள் சாட்சி விஜயராஜ் மற்றும் சாட்சி மகேஷ்குமார் ஆகியோர்களைப் பார்த்து நீங்க என்னடா மேலகொண்டையம்பேட்டைகாரனுங்கனா பெரிய சுன்னியாடா, ஏண்டா மேலகொண்டையம்பேட்டைகாரனுங்களுக்கு எவ்வளவு திமிரு புண்ட இருந்தா எங்க ஏரியாகாரனுங்கள அடிப்பிங்க என்று அருவெறுக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியதன் மூலம் 1 முதல் 16 எதிரிகள் இதச பிரிவு 294(பி)ன் கீழ் தண்டிக்கத்தக்கதும் இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றம் ஒன்றை செய்துள்ளீர்கள். |

| | | |
|---|---|---|
| | | **ஐந்தாவது குற்றச்சாட்டு (1 முதல் 16 எதிரிகள் மீது):**<br>மேற்படி நாள், மேற்படி நேரம், மேற்படி சம்பவ இடத்தில் வைத்து மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1 முதல் 16 எதிரிகள் மற்றும் இளம்பிழையாளி சிவனேசன் ஆகியோர்கள் அவரவர்கள் கையில் வைத்திருந்த சவுக்கு கட்டான், கல் ஆகியவைகளால் சுமார் ரூ.50,000/- மதிப்புள்ள TN 48 AB 5416 Splendor Pro மோட்டார் சைக்கிளை தாக்கி சேதப்படுத்தியன் மூலம் 1 முதல் 16 எதிரிகள் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள்(சேதம் மற்றும் இழப்பு) தடுப்பு சட்டம் பிரிவு 3ன் கீழ் தண்டிக்கத்தக்கதும் இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றம் ஒன்றை செய்துள்ளீர்கள். |
| எதிரிகளின் பதிலுரை | & | குற்றவாளிகள் இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | | 1 முதல் 16 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 148, 294(பி), 324, 307 r/w 3 |

| | | |
|---|---|---|
| | | of TNPPDL ACT 1992–ன் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானிக்கப் படுகிறது. |
| தண்டனை அல்லது உத்தரவு | | 1 முதல் 16 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 148, 294(பி), 324, 307 r/w 3 of TNPPDL ACT 1992–ன் கீழான குற்றச்சாட்டுக்கள், அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப் படவில்லையென முடிவு செய்யப்படுகிறது, எனவே, மேற்படி பிரிவுகளின் கீழ், 1 முதல் 16 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து, 1 முதல் 16 எதிரிகளை, கு.வி.மு.ச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| பிணைப்பத்திரங்கள் தொடர்பான உத்தரவு | : | இவ்வழக்கில், எதிரிகள் தரப்பில் பிணைப்பத்திரம் ஏதும் எழுதித் தரப்பட்டிருந்தால், அவற்றை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| வழக்கு சொத்துக்கள் தொடர்பான உத்தரவு | : | இவ்வழக்கில், இந்நீதிமன்ற R.P.No.2/2026-ன் படி தாக்கல் செய்யப்பட்ட அ.த.சா.பொ.1 முதல் அ.த.சா.பொ.4 வரையிலானவற்றை, மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப் படுகிறது.<br><br>இவ்வழக்கில் தாக்கல் செய்யப் பட்டுள்ள தடயப்பொருளான Motor Cycle TN 48 AB 5416 என்ற பதிவெண் கொண்ட கருப்புநிற SPLENDOR PRO இருசக்கர வாகனத்தை காவல்நிலையப் பொறுப்பில் உள்ளதை மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அதன் பதிவு உரிமையாளர் நீதிமன்றத்தில் உரிய மனு செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இதுநாள்வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 10.06.2026 தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.A.ஆனந்தன் அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.மனோகரன் அவர்கள் ஆஜராகியும்,

இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

01. **இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –**

திருச்சி மாநகரம், ஸ்ரீரங்கம், மேலகொண்டையம்பேட்டை தெற்கு தெரு ஐயன்வெட்டி தெரு சந்திப்பு பாதாள சாக்கடை கிணறு அருகே 09.08.2020 இரவு 22.00 மணிக்கு சாட்சி 1 விஜயராஜ் மற்றும் சாட்சி 2 மகேஷ்குமார் ஆகியோர்கள் சாட்சி 1 விஜயராஜ் அவரது தகப்பனாருக்கு சொந்தமான TN 48 AB 5416 Splendor Pro மோட்டார் சைக்கிளில் அவரது அப்பாவிற்கு மாத்திரை வாங்கச் செல்வதற்காக சம்பவ இடத்தில் வந்தபோது, மேலகொண்டையம்பேட்டை மற்றும் நடுகொண்டையம்பேட்டை இருதரப்பினருக்கும் உள்ள முன்விரோதம் வைத்து நடுகொண்டையம்பேட்டையைச் சேர்ந்த எதிரிகள் மற்றும் இளம்பிழையாளி சிவனேசன் ஆகியோர்கள் சட்டவிரோத கும்பலாக ஒன்று சேர்ந்து சாட்சி விஜயராஜ் மற்றும் சாட்சி மகேஷ்குமார் ஆகியோர்களை பார்த்து நீங்க என்னடா மேலகொண்டையம்பேட்டைகாரனுங்கனா பெரிய சுன்னியாடா ஏண்டா மேலகொண்டையம்பேட்டைகாரனுங்களுக்கு எவ்வளவு திமிரு புண்ட இருந்தா எங்க ஏரியா காரனுங்கள அடிப்பீங்க என்று அறுவெறுப்பான வார்த்தைகளால் திட்டியும், சாட்சி 1 விஜயராஜ் மற்றும் சாட்சி 2 மகேஷ்குமார் ஆகியோர்களை 1

முதல் 16 வரையிலான எதிரிகள் மற்றும் இளம்பிழையாளி சிவனேசன் ஆகியோர் நீங்க இனி உயிரோடு இருக்கக் கூடாது இத்தோடு செத்து தொலைந்துபோங்கடா என்று எல்லா எதிரிகளும் மற்றும் இளம்பிழையாளி சிவனேசனும் கூறி, 1ம் எதிரி தன் கையில் வைத்திருந்த சவுக்கு கட்டானால் சாட்சி 1 விஜயராஜை தாக்கியதில், வலது முன்னங்கையில் காயமாகியும், 2ம் எதிரி, மகேஷ்குமாரை தன் கையில் வைத்திருந்த கட்டானால் சாவுடா என்று சொல்லி தாக்கியதில் வலது கை நடுவிரலில் காயமாகியும் மற்ற எல்லா எதிரிகளும் மற்றும் இளம்பிழையாளி சிவனேசனும் சவுக்கு கட்டான், கல் மற்றும் கையால் மாறி மாறி தாக்கி சாட்சி 1 விஜயராஜ் சாட்சி 2 மகேஷ்குமார் ஆகியோர்களுக்கு சிறிய காயத்தை ஏற்படுத்தியதாகவும், எல்லா எதிரிகளும் மற்றும் இளம்பிழையாளி சிவனேசன் ஆகியோர் அவரவர்கள் கையில் வைத்திருந்த சவுக்கு கட்டான், கல் ஆகியவைகளால் சுமார் 50,000/?– மதிப்புள்ள TN 48 AB 5416 Splendor Pro மோட்டார் சைக்கிளை தாக்கி சேதப்படுத்தியதாகவும், எனவே, எதிரிகள் இதச சட்டப்பிரிவுகள் 147,148,294(பி), 324,307 r/w 3 of TNPPDL ACT 1992–ன் கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றங்களை புரிந்துள்ளார்கள் என்று அரசுத்தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02. இந்த வழக்கானது முதலில் 03.10.2022ஆம் தேதி வழக்கு கோப்பானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.25/2022 ஆக ஸ்ரீரங்கம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில்

கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. 207 ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது இதச சட்டப்பிரிவு 307 r/w 3 of TNPPDL ACT 1992 ன் கீழான குற்றச்சாட்டுக்கள் என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு ஸ்ரீரங்கம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் மேல்விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.200/2022 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது 21.07.2023 தேதியன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

03. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர், இருதரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக பின்வரும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது.

3.1) **<u>முதலாவது குற்றச்சாட்டு (1 முதல் 16 எதிரிகள் மீது):</u>**

திருச்சி மாநகரம், ஸ்ரீரங்கம் சட்டம் ஒழுங்கு காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மேலகொண்டையம்பேட்டை தெற்கு தெரு ஐயன்வெட்டி தெரு சந்திப்பு பாதள சாக்கடை கிணறு அருகே கடந்த 09.08.2020 ந் தேதி இரவு 22.00 மணிக்கு இவ்வழக்கின் சாட்சி 1 விஜயராஜ் மற்றும் சாட்சி 2 மகேஷ்குமார் ஆகியோர்கள் சாட்சி 1 விஜயராஜ் அவரது தகப்பனாருக்கு சொந்தமான TN 48 AB 5416

Splendor Pro மோட்டார் சைக்கிளில் அவரது அப்பாவிற்கு மாத்திரை வாங்க செல்வதற்காக சம்பவ இடத்திற்கு வந்தபோது, மேலகொண்டையம்பேட்டை மற்றும் நடுகொண்டையம்பேட்டையயைச் சேர்ந்த 1 முதல் 16 எதிரிகள் அனைவரும் மற்றும் இளம்பிழையாளி சிவனேசன் ஆகியோர்கள் கலம் செய்யும் பொதுவான நோக்கத்துடன் சட்டவிரோதமாக கையில் கற்கள் மற்றும் கட்டான்களுடன ஒன்று கூடியதன் மூலம் 1 முதல் 16 எதிரிகளாகிய நீவிர் இதச பிரிவு 148ன் கீழ் தண்டிக்கத்தக்கதும், இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றம் ஒன்றை செய்துள்ளீர்கள்.

3.2) **<u>இரண்டாவது குற்றச்சாட்டு (1 முதல் 16 எதிரிகள் மீது):</u>**

மேற்படி நாள், மேற்படி நேரம், மேற்படி சம்பவ இடத்தில் வைத்து மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1 முதல் 16 எதிரிகளும் மற்றும் இளம்பிழையாளி சிவனேசனும் சவுக்கு கட்டான், கல் மற்றும் கையால் மாறி மாறி தாக்கி சாட்சி 1 விஜயராஜ், சாட்சி 2 மகேஸ்குமார் ஆகியோர்களுக்கு சிறிய காயத்தை ஏற்படுத்தியதன்மூலம் 1 முதல் 16 எதிரிகள் இதச பிரிவு 324ன் கீழ் தண்டிக்கத்தக்கதும், இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றமொன்றை செய்துள்ளீர்கள்.

**<u>3.3) மூன்றாவது குற்றச்சாட்டு (1 முதல் 16 எதிரிகள் மீது):</u>**

மேற்படி நாள், மேற்படி நேரம், மேற்படி சம்பவ இடத்தில் வைத்து 1வது எதிரி தன் கையில் வைத்திருந்த சவுக்கு கட்டானால் சாட்சி 1 விஜயராஜை

தாக்கி வலது முன்கையில் காயமாக்கியும், சாட்சி 2 மகேஷ்குமாரை 2 வது எதிரி தன் கையில் வைத்திருந்த கட்டானால் சாவுடா என்று சொல்லி தாக்கி, வலது கை நடுவிரலில் காயமாக்கியும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, மற்ற எல்லா எதிரிகளும் மற்றும் இளம்பிழையாளி சிவனேசனும் சவுக்கு கட்டான், கல் மற்றும் கையால் மாறி மாறி தாக்கி சாட்சி 1 விஜயராஜ் மற்றும் சாட்சி 2 மகேஷ்குமார் ஆகியோர்களை பார்த்து நீங்க இனி உயிரோடு இருக்கக்கூடாது இத்தோடு செத்து தொலைந்து போங்கடா என்று கொலை முயற்சி செய்ததன் மூலம் 1 முதல் 16 எதிரிகள் இதச பிரிவு 307ன் கீழ் தண்டிக்கத்தக்கதும் இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றம் ஒன்றை செய்துள்ளீர்கள்.

3.4) **<u>நான்காவது குற்றச்சாட்டு (1 முதல் 16 எதிரிகள் மீது):</u>**

மேற்படி நாள், மேற்படி நேரம், மேற்படி சம்பவ இடத்தில் வைத்து மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரிகள் சாட்சி விஜயராஜ் மற்றும் சாட்சி மகேஷ்குமார் ஆகியோர்களைப் பார்த்து நீங்க என்னடா மேலகொண்டையம்பேட்டைகாரனுங்கனா பெரிய சுன்னியாடா, ஏண்டா மேலகொண்டையம்பேட்டைகாரனுங்களுக்கு எவ்வளவு திமிரு புண்ட இருந்தா எங்க ஏரியாகாரனுங்கள அடிப்பிங்க என்று அருவெறுக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியதன் மூலம் 1 முதல் 16 எதிரிகள் இதச பிரிவு 294(பி)ன் கீழ் தண்டிக்கத்தக்கதும் இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றம் ஒன்றை செய்துள்ளீர்கள்.

3.5) **<u>ஐந்தாவது குற்றச்சாட்டு (1 முதல் 16 எதிரிகள் மீது):</u>**

மேற்படி நாள், மேற்படி நேரம், மேற்படி சம்பவ இடத்தில் வைத்து மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1 முதல் 16 எதிரிகள் மற்றும் இளம்பிழையாளி சிவனேசன் ஆகியோர்கள் அவரவர்கள் கையில் வைத்திருந்த சவுக்கு கட்டான், கல் ஆகியவைகளால் சுமார் ரூ.50,000/- மதிப்புள்ள TN 48 AB 5416 Splendor Pro மோட்டார் சைக்கிளை தாக்கி சேதப்படுத்தியன் மூலம் 1 முதல் 16 எதிரிகள் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள்(சேதம் மற்றும் இழப்பு) தடுப்பு சட்டம் பிரிவு 3ன் கீழ் தண்டிக்கத்தக்கதும் இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றம் ஒன்றை செய்துள்ளீர்கள்.

04. இந்த எதிரிகள் மீது இதச சட்டப் பிரிவுகள் 148,294(பி), 324,307 r/w 3 of TNPPDL ACT 1992-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, தமிழில் படித்துக்காட்டி, விளக்கி வினவியபோது, எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்து, தாங்கள் குற்றவாளிகள் இல்லையென்று கூறினர். அதனால் சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**05. <u>அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம் :-</u>**

அரசு தரப்பில் சாட்சிகள் விஜயராஜ், முருகானந்தம், உத்தமன், செந்தில்குமார், மகேஷ்குமார், பரமசிவம், கண்ணன், சரவணன், சந்திரசேகர், மருத்துவர் ஜெயப்பிரியா, உதவி ஆய்வாளர் கோபிநாத் ஆகியோர் முறையே அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, புகார்

வாக்குமூலத்திலுள்ள அ.சா.1ன் கையொப்பம், பார்வை மகசரிலுள்ள அ.சா.7ன் கையொப்பம், கைப்பற்றுதல் மகசரிலுள்ள அ.சா.7ன் கையொப்பம், ஒப்புதல் வாக்குமூலத்லுள்ள அ.சா.8ன் கையொப்பம், கைப்பற்றுதல் மகசரிலுள்ள அ.சா.8ன் கையொப்பம், ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.9ன் கையொப்பம், கைப்பற்றுதல் மகசரிலுள்ள அ.சா.9ன் கையொப்பம், விபத்துப்பதிவேடு மற்றும் காயச்சான்று,(மகேஷ்குமார்) விபத்துப்பதிவேடு மற்றும் காயச்சான்று (மகேஷ்குமார்). விபத்துப்பதிவேடு மற்றும் காயச்சான்று(விஜயராஜ்), விபத்துப்பதிவேடு மற்றும் காயச்சான்று(விஜயராஜ்), புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகசர், புகைப்படம், 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி கைப்பற்றுதல் மகசர், படிவம் 91(2 வரிசைகள்) ஆகியவை முறையே அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.20 வரையிலான சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாகனத்தின் உடைந்த பாகம் சிறிதளவு, பெரிய ஜல்லி கற்கள் 4 வரிசை, 2 அடி நீளமுள்ள சவுக்கு கட்டான்கள்–4, 2 1/2 அடி நிளமுள்ள சவுக்கு கட்டான்கள்–2 ஆகியவை சா.பொ.1 முதல் சா.பொ.4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

## 06. <u>அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:</u>

07. அ.சா.1 விஜயராஜ் தனது சாட்சியத்தில், 1 முதல் 16 எதிரிகள் யாரையுமே தனக்கு தெரியாது என்றும், 09.08.2020 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில்

தான், தன் நண்பன் மகேஷ்குமாருடன் இருசக்கர வாகனத்தில், தனது வீடு உள்ள மேலகொண்டையம்பேட்டையிலிருந்து அய்யன்வெட்டி தெரு வழியாக வந்தோம் என்றும், அப்போது இரவில் சுமார் 40 அல்லது 50 பேர் அய்யன் வெட்டிதெரு பாதாள சாக்கடை கிணறு அருகே அடையாளம் தெரியாமல் என்னையும், மகேஷ்குமாரையும் தாக்கிவிட்டார்கள்.நாங்கள் வந்த TN 48 AB 5416 என்ற ஸ்பிளண்டர் பிளஸ் என்ற வாகனத்தையும் அடித்து உடைத்துவிட்டார்கள் என்றும், தங்களை கட்டையால் தாக்கினார்கள் என்றும், அதில், தனக்கு தலையிலும், வலது கையிலும் காயம் ஏற்பட்டது என்றும், சாட்சி மகேசுக்கு காயம் ஏற்பட்டதா என்று தனக்கு தெரியாது என்றும், தனக்கு மயக்கமாகிவிட்டது என்றும், அந்த தெருவில் இருந்த செந்தில்குமார் தங்களை ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும், பின்பு திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு வந்தோம் என்றும், அங்கு ஸ்ரீரங்கம் போலிசார் வந்தார்கள் என்றும், அவர்களிடம் சுமார் 40 அல்லது 50 பேர் அடித்ததாக சொன்னேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் மயக்கத்தில் இருந்தேன் என்றும், கையொப்பம் மட்டும் போட்டேன். அந்த கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.1 என்றும், போலிசார் அடித்தது யார் என்று

விசாரித்தார்கள் என்றும், அடித்தது யார் என்று தெரியாது என்றுதான் சொன்னேன் என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

08. அ.சா.2 முருகானந்தம் தனது சாட்சியத்தில், அசா.1 விஜயராஜ், சாட்சி மகேஷ்குமார், சாட்சி செல்வராஜ் ஆகியேரை தெரியும் என்றும், 1 முதல் 16 எதிரிகள் யாரையுமே தனக்கு தெரியாது என்றும், 2020 ஆம் ஆண்டு 09 ஆம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் மேலகொண்டையம்பேட்டை, நேருஜி பள்ளி அருகே கூட்டமாக இருந்தது. ஏதோ சண்டை நடந்ததாக சொன்னார்கள் என்றும், தான் அதை கேட்ட உடன் காரை எடுத்துக் கொண்டு போய்விட்டேன் என்றும், யார் யாருக்கிடையே சண்டை நடந்தது என்றும், அதில் யாருக்கு காயம் ஏற்பட்டது என்றும் தனக்கு தெரியாது என்றும், சண்டை நடந்ததை நேரில் பார்க்கவில்லை என்றும், மற்ற சாட்சிகளான உத்தமன், பரமசிவம், செந்தில்குமார் ஆகியோரை தெரியும் என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

09. அ.சா.3 உத்தமன் தனது சாட்சியத்தில்அசா.1 விஜயராஜ், அசா.2 முருகானந்தம், சாட்சி மகேஷ்குமார், சாட்சிகள் செல்வராஜ், பரமசிவம், செந்தில்குமார் ஆகியோரை தெரியும். 1 முதல் 16 எதிரிகள் யாரையுமே தனக்கு தெரியாது என்றும், 09.08.2020 அன்று இரவு 10.00 மணியளவில் சவாரிக்கு சென்றுவிட்டு அய்யன் வெட்டிதெரு வழியாக கொண்டையம்பேட்டைக்கு வந்தேன் என்றும், அங்கு ஐஸ்வர்யா அப்பார்மெண்ட் அருகே ஏதோ சண்டை

நடந்தது என்றும், அங்கு அசா.1 விஜயராஜ் காலில் அடிபட்டிருந்தார் என்றும், கை வலிப்பதாகவும் சொன்னார் என்றும், அவரை தன் ஆட்டோவில் ஏற்றி ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும், அவரை யார், எதனால் அடித்தார்கள் என்று தெரியாது என்றும், இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.4 செந்தில்குமார் தனது சாட்சியத்தில், அசா.1 விஜயராஜ், அசா.2 முருகானந்தம், அசா.3 உத்தமன் ஆகியோரை தெரியும் என்றும், சாட்சி மகேஷ்குமாரை தெரியும் என்றும், சாட்சிகள் செல்வராஜ், பரமசிவம் ஆகியோரை தெரியாது என்றும், 1 முதல் 16 எதிரிகள் யாரையுமே எனக்கு தெரியாது என்றும், 09.08.2020 அன்று இரவு 10.30 மணியளவில் அசா.1 விஜயராஜை யாரோ அடித்துவிட்டதாகவும், அவர் வீட்டிலிருப்பதாகவும் சொன்னார்கள் என்றும், அவரை தான் அவரது வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டு ஸ்ரீரங்கம், அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும், அசா.1 ஐ யார் எங்கு வைத்து எதனால் அடித்தார்கள் என்று தெரியாது என்றும், வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

11. அ.சா.5 மகேஷ்குமார் தனது சாட்சியத்தில், கண் மருத்துவமனையில் விற்பனை பிரிவில் வேலை செய்கிறேன். அ.சா.1 விஜயராஜ், அ.சா.2 முருகானந்தம், அ.சா.3 உத்தமன், அ.சா.4 செந்தில்குமார் ஆகியோரை தெரியும் என்றும், 1 முதல் 13, 15, 16 எதிரிகளை தெரியாது என்றும், 14 ஆம் எதிரி

சுரேஷ்குமாரை தெரியாது என்றும், கடந்த 2020 ஆம் வருடம் 09 ஆம் தேதி தானும், அ.சா.1 விஜயராஜும் இருசக்கர வாகனத்தில் வீட்டிலிருந்து மேலகொண்டையம்பேட்டை தெரு வழியாக மெடிக்கல் ஷாப்பில் மருந்து வாங்க இரவு 08.00 மணிவாக்கில் சென்றுகொண்டிருந்தோம். அந்த தெரு வழியாக செல்லும்போது வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டோம் என்றும், விபத்து நடந்துவிட்டது என்றும், அதில் தனக்கும், அசா.1 க்கும் காயம் ஏற்பட்டது என்றும், அடிபட்ட உடன் நாங்கள் முதலில் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு போய்விட்டு, பிறகு திருச்சி, அரசு மருத்துவமனைக்கு வந்தோம் என்றும், தன்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றவர் பெயர் குமார் என்றும், இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.6 பரமசிவம் தனது சாட்சியத்தில், அசா.1 விஜயராஜ், அசா.2 முருகானந்தம், அசா.3 உத்தமன், அசா.4 செந்தில்குமார், அசா.5 மகேஷ்குமார் ஆகியோரை தெரியும் என்றும், 1 முதல் 13, 15, 16 எதிரிகளை தெரியாது என்றும், 14 ஆம் எதிரி சுரேஷ்குமாரை தெரியாது என்றும், தனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், கடந்த 2020 ஆம் வருடம் ஒரு நாள் ஸ்ரீரங்கம் போலிசார் தன்னை காவல்நிலையத்திற்கு வரசொன்னார்கள் என்றும், தான் காவல்நிலையத்திற்கு போயிருந்தேன் என்றும், வேறு என்ன நடந்தது என்று தெரியாது என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.7 கண்ணன் தனது சாட்சியத்தில், போலிசார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும், போட்டேன் என்றும், அது எதற்கு என்று தெரியாது என்றும், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பங்கள் மட்டும் அதசாஆ.2 மற்றும் அதசாஆ.3 என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

14. அ.சா.8 சரவணன் தனது சாட்சியத்தில், எதிரிகளை தெரியாது. 14 ஆம் எதிரியை தெரியாது என்றும், போலிசார் தன் முன்பாக கைது செய்யவில்லை என்றும், போலிசார் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள், போட்டேன் என்றும், அது எதற்கு என்று தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் 1 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பம் மட்டும் அதசாஆ.4 என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பம் மட்டும் அதசாஆ.5 என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

15. அ.சா.9 சந்திரசேகர் தனது சாட்சியத்தில், எதிரிகளை தெரியாது. 14 ஆம் எதிரியை தெரியாது என்றும், போலிசார் தன் முன்பாக யாரையும் கைது

செய்யவில்லை என்றும், போலிசார் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள், போட்டேன் என்றும், அது எதற்கு என்று தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் 1 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பம் மட்டும் அதசாஆ.6 என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பம் மட்டும் அதசாஆ.7 என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

16. அ.சா.10 டாக்டர் ஜெயப்பிரியா தனது சாட்சியத்தில், தான் தற்சமயம் திருச்சி, திருவரங்கம், அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 09.08.2020 அன்று அதே மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, இரவு 11.00 மணியளவில் காயம்பட்ட மகேஷ்குமார் என்பவரை உத்தமன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும், காயம்பட்டவர் சுயநினைவுடன் இருந்தார் என்றும், அவர் தன்னை 09.08.2020 அன்று இரவு 10.00 மணியளவில் அடையாளம் தெரிந்த சுமார் 40 நபர்கள் ஐஸ்வர்யா அப்பார்ட்மெண்ட் அருகே கட்டானால் தாக்கியதாக சொன்னார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

17. அ.சா.10 டாக்டர் ஜெயப்பிரியா மேலும் தனது சாட்சியத்தில், அவரை பரிசோதித்து பார்த்தபோது, அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன என்றும்,

1. 1x1cm அளவில் சிராய்ப்பு காயம் வலது நடுவிரலில் காணப்பட்டது என்றும், 2. உடல் வலி, இடது மார்பிலும் வலி இருப்பதாக சொன்னார் என்றும், ஆனால் மூச்சுத் திணறல் எதுவும் இல்லை என்று சொன்னார் என்றும், அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தேன் என்றும், மேல்சிகிச்சைக்காகவும், எக்ஸ்ரே எடுத்து பார்க்கவும், அவரை திருச்சி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், அங்கு அவர் சிகிச்சை பெற்ற அறிக்கையை பெற்றேன் என்றும், அதில், அவர் 10.08.2020 அன்று அதிகாலை 12.05 மணிக்கு பூமிநாதன் என்பவர் மூலம் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், அவருக்கு உள்நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்றும், அங்கு எக்ஸ்ரே எடுத்து பார்க்கப்பட்டுள்ளது என்றும், அவருக்கு அதில் எலும்பு முறிவு எதுவும் ஏற்படவில்லை என தெரிய வந்தது என்றும், சிகிச்சைக்கு பிறகு அவர் 12.08.2020 அன்று தானாக வெளியேறியுள்ளார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

18. அ.சா.10 டாக்டர் ஜெயப்பிரியா மேலும் தனது சாட்சியத்தில், அதே நாள் இரவு 11.10 மணியளவில் காயம்பட்ட விஜயராஜ் என்பவரை செந்தில்குமார் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும், காயம்பட்ட நபர் சுயநினைவுடன் இருந்தார் என்றும், அவர் தன்னை 09.08.2020 அன்று இரவு 10.00 மணியளவில் ஐஸ்வர்யா அப்பார்ட்மெண்ட் அருகே அடையாளம் தெரியாத ஒரு நபர் சவுக்கு கட்டையால் தாக்கியதாக சொன்னார் என்றும், அவரை

பரிசோதித்து பார்த்த போது, அவர் தனக்கு தலை வலி, உடல் வலி, வலது கையில் வலி இருப்பதாக சொன்னார் என்றும், அவருக்கு வெளிப்புற காயங்கள் மற்றும் வீக்கம் எதுவும் இல்லை என்றும், அவருக்கும் முதலுதவி சிகிச்சை அளித்து நுண்கதிர் படம் எடுத்து பார்ப்பதற்காக திருச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

19. அ.சா.10 டாக்டர் ஜெயப்பிரியா மேலும் தனது சாட்சியத்தில், அவர் 10.08.2020 அன்று அதிகாலை 12.00 மணியளவில் திருச்சி, அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார் என்றும், அங்கு அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும், நுண்கதிர் படம் எடுத்து பார்த்ததில் எலும்பு முறிவு காணப்படவில்லை என தெரிய வந்தது என்றும், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றும், அவர் 12.08.2020 அன்று மருத்துவமனையிலிருந்து தானாக வெளியேறிவிட்டார் என்றும், ஸ்ரீரங்கம், அரசு மருத்துவமனை மகேஷ்குமார் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.த.சா.ஆ.8 என்றும், திருச்சி, அரசு மருத்துவமனையில் அவருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று அ.த.சா.ஆ.9 என்றும், ஸ்ரீரங்கம், அரசு மருத்துவமனை விஜயராஜ் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று அ.த.சா.ஆ.10 என்றும், திருச்சி, அரசு மருத்துவமனையில் அவருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று அ.த.சா.ஆ.11 என்றும்,

கட்டான் போன்ற ஆயுதத்தால் மேற்படி இரு நபரையும், பல நபர்கள் சேர்ந்து தாக்கும்போது, அவர்களுக்கு மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும் சாட்சியமளித்துள்ளார்.

20. அ.சா.11 கோபிநாத் தனது சாட்சியத்தில், தான் தற்சமயம் திருச்சி மாவட்டம், நவல்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 10.08.2020 ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, திருச்சி அரசு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலை பெற்று, அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையிலிருந்த விஜயராஜ் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று படித்துக் காண்பித்து அவரிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த புகார் அ.த.சா.ஆ.12 என்றும், பின்பு நிலையம் வந்து அன்று அதிகாலை 2.30 மணியளவில் ஸ்ரீரங்கம் காவல் நிலைய குற்ற எண்.552/2020 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 307 மற்றும் பிரிவு 3 பொதுச்சொத்துக்கள் சேதார தடை சட்டம் 1992–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.13 என்றும், அசல் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் காவலர் மூலம் குற்றவியல் நடுவர் ஸ்ரீரங்கம் அவர்களுக்கு அனுப்பினேன் என்றும், அதன் நகல்களை உரிய மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர், வழக்கு கோப்பை ஆய்வாளர் செந்தில்வேல்குமார் பார்வைக்கு வைத்தேன் என்றும், புலன் விசாரணைக்காக ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

21. அ.சா.11 கோபிநாத் மேலும் தனது சாட்சியத்தில், ஆய்வாளர் செந்தில்வேல்குமார் வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் கண்ணன், பார்த்திபன் முன்னிலையில் பார்வையிட்டு,பார்வை மகசர் தயார் செய்தார் என்றும், சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார் என்றும், அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.14 என்றும், சம்பவ இடத்தை பொருத்து ஒரு மாதிரி வரைபடம் வரைந்தார் என்றும், அது அ.த.சா.ஆ.15 என்றும், அன்று காலை 6.30 மணியளவில் சம்பவ இடத்திலிருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் 1) TN 48 AB 5416 என்ற பதிவெண் கொண்ட கருப்பு நிற Splendor Pro சேதமடைந்த இருசக்கர வாகனம் ஒன்று, 2) இருசக்கர வாகனத்தின் உடைந்த பாகம் சிறிதளவு, 3) பெரிய ஜல்லி கற்கள்–4 ஆகியவற்றை மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார் என்றும், அந்த மகசர் அ.த.சா.ஆ.16 என்றும், அந்த வண்டி தொடர்பான புகைப்படம் அ.த.சா.ஆ.17 என்றும், மேற்படி வாகனத்தின் உடைந்த பாகம் சிறிதளவு அ.த.சா.பொ.1 என்றும், பெரிய ஜல்லி கற்கள்–4 அ.த.சா.பொ.2 வரிசை என்றும், சாட்சிகள் விஜயராஜ், மகேஷ் குமார், செல்வராஜ், முருகானந்தம், பரமசிவம், உத்தமன், செந்தில்குமார், கண்ணன், பார்த்திபன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

22. அ.சா.11 கோபிநாத் மேலும் தனது சாட்சியத்தில், அன்று காலை 11.30 மணியளவில் ஆய்வாளர் செந்தில்வேல் குமார் திருவானைக்கோவில்

ரணியம்மன் கோவில் அருகில் உள்ள முட்காட்டில் எதிரிகள் குண்டன் ரஞ்சித் (எ) ரஞ்சித், பிரபு (எ) பிரபாகரன் மற்றும் அஜய் (எ) ஆகாஷ் ஆகியோர்களை சாட்சிகள் சரவணன், சந்திரசேகரன் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது, 1ம் எதிரி ரஞ்சித்(எ) குண்டன் தாமாக முன்வந்து சாட்சிகள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால், முட்புதரில் மறைத்து வைத்திருக்கும் சவுக்கு கட்டான்களை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து 1ம் எதிரி ரஞ்சித்(எ) குண்டன் மற்றும் சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.18 என்றும், பின்பு, 12.50 மணியளவில் ரணியம்மன் அருகில் உள்ள கோவில் முட்காட்டில் அதே சாட்சிகள் முன்னிலையில் 1ம் எதிரி ரஞ்சித்(எ) குண்டன் சுமார் 2 அடி நீளமுள்ள சவுக்கு கட்டான்கள்–4 மற்றும் 2 1/2 நீளமுள்ள சவுக்கு கட்டான்கள் – 2, ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததாகவும், அதை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார் என்றும், சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.19 என்றும், 2 அடி நீளமுள்ள சவுக்கு கட்டான்கள் 4 எண்ணிக்கை அ.த.சா.பொ.3 வரிசை என்றும், 2 1/2 நீளமுள்ள சவுக்கு கட்டான்கள் – 2 எண்ணிக்கை அ.த.சா.பொ.4 வரிசை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

23. அ.சா.11 கோபிநாத் மேலும் தனது சாட்சியத்தில், பின்பு, எதிரிகளை நிலையம் கொண்டு வந்து, திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், தடயப்பொருட்களை படிவம் 91ன் படி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார் என்றும், அந்த படிவம் 91 – 2 எண்ணிக்கை அ.த.சா.ஆ.20 வரிசை என்றும், சாட்சிகள் சரவணன், சந்திரசேகர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், ஆய்வாளர் செந்தில்வேல்குமார் பணி மாறுதலில் சென்று விட்டதால் அவருக்கு பின் வந்த ஆய்வாளர் அரங்கநாதன் மேற்படி வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து, மேற்படி சாட்சிகளை திரும்பவும் விசாரித்தபோது, அதே வாக்குமூலங்களை சொன்னதால் புதிதாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், சாட்சிகள் விஜயராஜ், மகேஷ்குமார், செல்வராஜ், முருகானந்தம், பரமசிவம், உத்தமன், செந்தில்குமார் ஆகியோர்களை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

24. அ.சா.11 கோபிநாத் மேலும் தனது சாட்சியத்தில், 28.04.2022ம் தேதி வழக்கின் சாட்சியான பூமிநாதனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், வழக்கில் காயம்பட்ட சாட்சி விஜயராஜ் மற்றும் மகேஷ்குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் கோகுல் ஆனந்த், ஜெயப்பிரியா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றார் என்றும், வழக்கில் சாட்சிகளின் வாக்குமூலங்களை

பதிவு செய்த காவலர் நர்மதாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், தன்னையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இத்துடன் வழக்கு விசாரணை முடித்து ஆய்வாளர் அரங்கநாதன் 16.05.2022 அன்று எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 147, 148, 324, 307 மற்றும் 294(பி) மற்றும் பிரிவு – 3 பொதுச்சொத்துக்கள் சேதார தடுப்புச் சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், ஆய்வாளர் விசாரணையின்போது, சாட்சிகள் விஜயராஜ், மகேஷ்குமார், முருகானந்தம், பரமசிவம், உத்தமன், செந்தில்குமார், கண்ணன், சரவணன் ஆகியோர்கள் வாக்குமூலத்தில் உள்ளவாறு சம்பவம் தொடர்பாக விசாரணையில் சொல்லியுள்ளனர் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

25. **குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (b) வின் கீழ் வினவுதல்:**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிந்த பின்னர் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிf ளுக்கு பாதகமான சங்கதிகளை விளக்கி கூறி, குற்ற விசாரணை முறைச் சட்டப்பிரிவு 313(1)(b)ன் கீழ் விசாரித்தபோது, மேற்படி எதிரிகள் மேற்படி சாட்சிகள் கூறிய விவரங்கள் பொய் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறினார்கள்.

26. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

இந்த வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச சட்டப்பிரிவுகள் 148,294(பி), 324, 307 r/w 3 of TNPPDL ACT 1992-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

27. <u>தீர்வு:-</u>

28. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் தனது வாதத்தில், 1 முதல் 16 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 148,294(பி), 324,307 r/w 3 of TNPPDL ACT 1992-ன் கீழான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க, அரசுத்தரப்பில், அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகளையும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.20 வரையிலான சான்றாவணங்களையும், அ.த.சா.பொ.1 முதல் அ.த.சா.பொ.4 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்திலிருந்தும், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்களிலிருந்து, சந்தர்ப்ப சூழ்நிலையின் அடிப்படையில், 1 முதல் 16 எதிரிகளுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள், அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

29. மாறாக, 1 முதல் 16 எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான புகார்தாரரான அ.சா.1 பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளதாகவும், வழக்குச் சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.5 ம் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளதாகவும், சம்பவத்தை நேரில் கண்ணுற்றதாக கூறப்படும் அரசுத்தரப்பு சாட்சிகள் யாரும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை என்றும், அரசுத்தரப்பு தான் எதிரிகள் மீதான வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க வேண்டும் என்றும், அரசுத்தரப்பு வழக்கின் மீது பல்வேறு சந்தேகங்கள் எழுவதாகவும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி அவரை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

30. இருதரப்பு கருத்துக்களும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. 1 முதல் 16 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 148,294(பி), 324,307 r/w 3 of TNPPDL ACT 1992 –ன் கீழான குற்றச்சாட்டுக்கள், அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பது தொடர்பாக, பரிசீலிக்க வேண்டியுள்ளது.

31. இந்த வழக்கில் 1 முதல் 16 எதிரிகளுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பரிசீலிக்கும்போது, காயம்பட்ட சாட்சி மற்றும் புகார்தாரரான அ.சா.1 ஆக சாட்சியமளித்த விஜயராஜ் தனது முதல் விசாரணை சாட்சியத்தில்,

09.08.2020 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் தான், தன் நண்பன் மகேஷ்குமாருடன் இருசக்கர வாகனத்தில், தனது வீடு உள்ள மேலகொண்டையம்பேட்டையிலிருந்து அய்யன்வெட்டி தெரு வழியாக வந்தோம் என்றும், அப்போது இரவில் சுமார் 40 அல்லது 50 பேர் அய்யன் வெட்டிதெரு பாதாள சாக்கடை கிணறு அருகே அடையாளம் தெரியாமல் தன்னையும், மகேஷ்குமாரையும் தாக்கிவிட்டார்கள் என்றும், தாங்கள் வந்த TN 48 AB 5416 என்ற ஸ்பிளண்டர் பிளஸ் என்ற வாகனத்தையும் அடித்து உடைத்துவிட்டார்கள் என்றும், தங்களை கட்டையால் தாக்கினார்கள் என்றும், அதில், தனக்கு தலையிலும், வலது கையிலும் காயம் ஏற்பட்டது என்றும், சாட்சி மகேசுக்கு காயம் ஏற்பட்டதா என்று தனக்கு தெரியாது என்றும், தனக்கு மயக்கமாகிவிட்டது என்றும், அந்த தெருவில் இருந்த செந்தில்குமார் தங்களை ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும், போலிசார் அடித்தது யார் என்று விசாரித்தார்கள் என்றும், அடித்தது யார் என்று தெரியாது என்றுதான் சொன்னேன் என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார். அவர் மூலம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் கையொப்பம் மட்டும் அதசாஆ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

32. எனவே, இந்த வழக்கு சம்பவத்தின் காயம்பட்டதாக கூறப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில், போலிசார் அடித்தது யார் என்று விசாரித்தார்கள் என்றும், அடித்தது யார் என்று தெரியாது என்றுதான் சொன்னேன் என்று 1 முதல் 16

எதிரிகள் பற்றி எதுவும் கூறாமல் பிறழ் சாட்சியாகி விட்டார். எனவே, அவரது சாட்சியம் 1 முதல் 16 எதிரிகளை குற்றச்சம்பவத்துடன் இணைக்கும் வகையில் இல்லை.

33. அதேபோல், சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.5 மகேஷ்குமார் என்பவர் 1 முதல் 16 எதிரிகளை தெரியாது என்றும், சம்பவத்தன்று தானும், அசா.1 விஜயராஜும் இருசக்கர வாகனத்தில் வீட்டிலிருந்து மேலகொண்டையம்பேட்டை தெரு வழியாக மெடிக்கல் ஷாப்பில் மருந்து வாங்க இரவு 08.00 மணிவாக்கில் சென்றுகொண்டிருந்தோம் என்றும், அந்த தெரு வழியாக செல்லும்போது வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டோம் என்றும், விபத்து நடந்துவிட்டது என்றும், அதில் தனக்கும், அசா.1 க்கும் காயம் ஏற்பட்டது என்று சாட்சியமளித்தும், 1 முதல் 16 எதிரிகளின் செய்கை குறித்து சாட்சியமளிக்காததால் இவர் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டுள்ளார்.

34. சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 முருகானந்தம் 1 முதல் 16 எதிரிகள் யாரையுமே தனக்கு தெரியாது என்றும், மேலகொண்டையம்பேட்டை நேருஜி பள்ளி அருகே கூட்டமாக இருந்தது என்றும், ஏதோ சண்டை நடந்ததாக சொன்னார்கள் என்றும், தான் அதை கேட்ட உடன் காரை எடுத்துக்கொண்டு போய்விட்டேன் என்றும், யார் யாருக்கிடையே சண்டை நடந்தது என்றும், அதில் யாருக்கு காயம் ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும் சண்டை நடந்ததை நேரில் பார்க்கவில்லை என்றும்

சாட்சியமளித்துள்ளதால் அவர் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். இவரது சாட்சியமும் அரசுத்தரப்பிற்கு உதவுவதாக இல்லை.

35. சம்பவத்தை நேரில் கண்ணுற்ற மற்ற சாட்சிகளான அ.சா.3 உத்தமன் அ.சா.4 செந்தில்குமார் மற்றும் அ.சா.6 பரமசிவம் 1 முதல் 16 எதிரிகளை தெரியாது என்றும், ஐஸ்வர்யா அப்பார்ட்மெண்ட் அருகே ஏதோ சண்டை நடந்தது என்றும், அ.சா.1 ற்கு காலில் அடிபட்டிருந்தார் என்றும், அவரை யாரோ அடித்து விட்டார்கள் என்றும், அவரை யார் எதனால் அடித்தார்கள் என்று தெரியாது வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளதால் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டுள்ளனர்.

36. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.7 கண்ணன் தனது சாட்சியத்தில், பார்வை மகசரர் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையொப்பங்கள் தங்களுடையது தான் என்றும், அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார். இவரது சாட்சியமும் அரசுத்தரப்பிற்கு உதவுவதாக இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.8 சரவணன் மற்றும் அ.சா.9 சந்திரசேகர் எதிரிகளை தங்களுக்குத் தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் தங்களுடையது தான் என்றும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளனர்.

37. அ.சா.10 மருத்துவர் ஜெயப்பிரியா காயம்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.5 க்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஆவார். இவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பத்திகள் 16 முதல் 19–ல் உள்ளவாறு குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.1 மற்றும் அ.சா.5 ற்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சையளித்து அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று விபத்து பதிவேடுகள் மற்றும் காயச்சான்றுகள் வழங்கியது பற்றி சாட்சியமளித்துள்ளார்.

38. அ.சா.11 கோபிநாத் தனது சாட்சியத்தில், கடந்த 10.08.2020 அன்று ஸ்ரீரங்கம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, அ.சா.1 கொடுத்த புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் ஸ்ரீரங்கம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தது குறித்தும், பின்னர் ஆய்வாளர் செந்தில்வேல்குமார் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும், சம்பவ இடத்திலிருந்து தடயப்பொருட்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியது குறித்தும், பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், 1, 2,3 எதிரிகளை கைது செய்து விசாரித்தபோது, 1ம் எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தது பற்றியும், ஒப்புதல் வாக்குமூலத்தின்

அடிப்படையில் கைப்பற்றுதல் மகசரில் தடயப்பொருட்களை கைப்பற்றியது குறித்தும், 1 முதல் 3 எதிரிகளை நீதிமன்ற காவலுக்குட்படுத்தியது குறித்தும், தடயப்பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது குறித்தும், மருத்துவரை விசாரணை செய்து காயச்சான்றிதழ்கள் பெற்றது குறித்தும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

39. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் மொத்தம் 11 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்களில், இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.5, சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.6, பார்வை மகசர் சாட்சியான அ.சா.7, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.8 மற்றும் அ.சா.9 வரையான சாட்சிகள் அரசுத்தரப்பை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ளனர். எனவே, மேலே விவரத்தபடி, மேற்படி சாட்சிகள் யாரும், 1 முதல் 16 எதிரிகளை குற்றச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தும் வகையில் சாட்சியமளிக்கவில்லை.

40. மேலும், மேலே விவரித்தபடி சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் சாட்சிகளான 1 மற்றும் 5 எதிரிகளை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.10 மருத்துவர், அ.சா.11 உதவி ஆய்வாளர் ஆகியோரின் சாட்சியங்களை மட்டுமே வைத்துக் கொண்டு, 1 முதல் 16 எதிரிகள் மீதான மேற்படி குற்றச்சாட்டுக்கள், அரசு

தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்ததாக கருத முடியாது. இதனால் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகங்கள் எழுகிறது. மேற்படி சந்தேகங்களின் பலன்கள், 1 முதல் 16 எதிரிகளுக்கு வழங்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

41. அதன்தொடர்ச்சியாக, 1 முதல் 16 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 148, 294(பி), 324, 307 r/w 3 of TNPPDL ACT 1992 –ன் கீழான குற்றச்சாட்டுக்கள், அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லையென முடிவு செய்யப்படுகிறது.

**42. <u>முடிவாக,</u>**

1) 1 முதல் 16 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 148, 294(பி), 324, 307 r/w 3 of TNPPDL ACT 1992–ன் கீழான குற்றச்சாட்டுக்கள், அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லையென முடிவு செய்யப்படுகிறது, எனவே, மேற்படி பிரிவுகளின் கீழ், 1 முதல் 16 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து, 1 முதல் 16 எதிரிகளை, கு.வி.மு.ச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2) இவ்வழக்கில், 1 முதல் 16 எதிரிகள் தரப்பில், பிணைப்பத்திரம் ஏதும் எழுதிதரப்பட்டிருந்தால், அவற்றை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

3) இவ்வழக்கில், இந்நீதிமன்ற R.P.No.2/2026–ன் படி தாக்கல் செய்யப்பட்ட அ.த.சா.பொ.1 முதல் அ.த.சா.பொ.4 வரையிலானவற்றை, மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

4) இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தடயப்பொருளான, Motor Cycle TN 48 AB 5416 என்ற பதிவெண் கொண்ட, கருப்பு நிற SPLENDOR PRO இருசக்கர வாகனத்தை, காவல்நிலையப்பொறுப்பில் உள்ளதை, மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர், அதன் பதிவு உரிமையாளர் நீதிமன்றத்தில் உரிய மனு செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் நாள் புதன் கிழமை என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.06.17 16:54:01 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

**இணைப்பு**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | விஜயராஜ் |
| அ.சா.2 | – | முருகானந்தம் |
| அ.சா.3 | – | உத்தமன் |
| அ.சா.4 | – | செந்தில்குமார் |
| அ.சா.5 | – | மகேஸ்குமார் |
| அ.சா.6 | – | பரமசிவம் |
| அ.சா.7 | – | கண்ணன் |
| அ.சா.8 | – | சரவணன் |
| அ.சா.9 | – | சந்திசேகர் |
| அ.சா.10 | – | டாக்டர் T.ஜெயப்பிரியா |
| அ.சா.11 | – | கோபிநாத் (உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | – | புகாரில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து |
| அ.த.சா.ஆ.2 | – | பார்வை மகசரில் அ.சா.7ன் 1வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.3 | – | கைப்பற்றுதல் மகசரில் அ.சா.7ன் 1வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.4 | – | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.8ன் 1வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.5 | – | கைப்பற்றுதல் மகசரில் அ.சா.8ன் 1வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.6 | – | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.9ன் 2வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.7 | – | கைப்பற்றுதல் மகசரில் அ.சா.9ன் 2வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.8 | – | காயச்சான்றிதழ் மற்றும் விபத்துப்பதிவேடு (மகேஸ்குமார்) |
| அ.த.சா.ஆ.9 | – | காயச்சான்றிதழ் மற்றும் விபத்துப்பதிவேடு (மகேஸ்குமார்) |
| அ.த.சா.ஆ.10 | – | காயச்சான்றிதழ் மற்றும் விபத்துப்பதிவேடு (விஜயராஜ்) |
| அ.த.சா.ஆ.11 | – | காயச்சான்றிதழ் மற்றும் விபத்துப்பதிவேடு (விஜயராஜ்) |
| அ.த.சா.ஆ.12 | – | புகார் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.13 | | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.14 | – | பார்வை மகசர் |
| அ.த.சா.ஆ.15 | – | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.16 | – | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.17 | – | இருசக்கர வண்டியின் புகைப்படம் |
| அ.த.சா.ஆ.18 | – | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.த.சா.ஆ.19 | – | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.20 | – | படிவம் 91 (2 எண்ணிக்கை) |

**சான்றுப்பொருள்கள்:–**

அ.த.சா.பொ.1 இருசக்கர வாகனத்தின் உடைந்த பாகம் சிறிதளவு

அ.த.சா.பொ.2 பெரிய ஜல்லி கற்கள் –4

அ.த.சா.பொ.3 2 அடி நீளமுள்ள சவுக்கு கட்டான்கள் –4

அ.த.சா.பொ.4 2 ½ அடி நீளமுள்ள சவுக்கு கட்டான்கள் –2

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– <u>இல்லை</u>

SARAVANAN B

Digitally signed by SARAVANAN B
Date: 2026.06.17 16:54:09 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**